13ஆவது வருடத்தில்....

# விளம்பரம்

VLAMBARAM™

416-282-8059 416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

5வது இதழ் வெளிவருகின்றது

உலக தமிழோசை

இசையால் மயங்காதவர் யார்?

வீடு விற்க, வாங்க...

Raja M. Mahendran, P. Eng.

(Broker / Owner)

HOMELIFE HIGHER STANDARDS

Direct: 416.315-9397

OFFICE: 416.321-6969

Sales Agents Welcome

நதி 13 SEPTEMBER 01, 2003 பாலம் 17



## கனேடியப் பாடசாலை

கல்விப்பகுதியில் 2003/2004 ஆம் ஆண்டின் முதல் கட்டுரையாக இது அமைகிறது. பெற்றோர்களுக்காக எழுதப்படும் செய்தியாக இது இருப்பினும், பெற்றோர்கள் மூலம் ஒவ்வொரு மாணவர்களையும் விளம்பரம் பத்திரிகை சார்பில் இப்புதிய ஆண்டில் ஆரம்பிக்கப் போகும் கல்வி சிறந்து ஓங்கவேண்டும் ன்று மனம் பூரித்து வாழ்த்திக்கொள்கிறேன்.

இக்கட்டுரையில் எழுதப்படும் விடயம் ஏற்கனவே சற்றுவேறுபட்டு வெளியிடப்பட்டிருந்தபோதிலும், பல பெற்றோர் அக்கட்டுரையை படிக்கத் தவறியிருந்தமையினை ஒட்டி மீண்டும் பலரது வேண்டுகோளிற்கு இணங்க எழுதவேண்டியதாயிற்று.

அதிவிசேட புலமைப் பயிற்சி (Gifted Student Program) என்கின்ற விடயம் பற்றியே இம்முறை சில சுருக்கமான தகவல்களை பெற்றோர்களுக்காக எழுதிக்கொள்கிறேன். விடுமுறைக் காலத்தை மகிழ்ச்சியோடு கழித்த மாணவர்கள் மீண்டும் புத்தகங்களை வாரி அணைத்து காலையில் சுறுசுறுப்பாக அம்மா, அப்பாவுடன் வாக்குவாதப்பட்டு பள்ளிக்கூடம் செல்லும் சிறப்புக் காலம் இப்பத்திரிகை வெளிவரும் வாரமே ஆரம்பித்துக்கொள்கிறது. இவ்வாறு செல்லும் மாணவகூட்டத்தினருள் தரம் மூன்றில் நுழையும் மாணவர்களைப் பற்றியே சில தகவல்களை இக்கட்டுரையில் கவனிப்போம்.

விசேட புலமைப் பாடத்திட்டமானது, தரம் மூன்றிலே ஆரம்பிக்கிறது. அதனால் தரம் மூன்றை ஆரம்பிக்கும் மாணவர்களது பெற்றோர்கள் (தொடர்ச்சி 19ஆம் பக்கம்)

### உன்னை அறிந்தால்...

தூங்கிக்கொண்டு இருந்தவனிற்கு, மின்சாரமற்ற இருள், துயில் எழுப்பி இருக்கவேண்டும். தூரநோக்கற்ற சிலர் செய்யும் தவறுகள் பல நல்ல உள்ளங்களையும் பாதித்திருக்க கூடும்.

வந்ததோ மின்சாரதடை, மக்களின் கடும் பயணத்தில் ஒரு புள்ளி நிற்பாடு. இப்படி தான் வாழ்க்கை என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு. சிந்திக்க வைத்த செயற்பாடு; வாழ்வின் ஒரு தடங்கல். மக்களின் சிந்தனைக்கு தேவையான முன் ஏற்பாடு. சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சிலர் கொள்ளை இலாபம் அடித்திருக்கலாம். நெற்றிக்கண்ணனின் கண்ணில் அகப்பட்டதெல்லாம் நல்ல, தாராள மனம் படைத்த தமிழ்கடை முதலாளிகள் மக்கள் நலன்கருதி இருட்டிலும் நியாய விலைக்கு வியாபாரம் செய்த நல்ல உள்ளங்களும் இருக்கத்தான் செய்கின்றன. ஒரு சிலரின் தவறினால் ஒட்டுமொத்தமாகத் தமிழினத்தை குறைகூறும் சிலரைக்காண வெறுப்பு ஏற்படுவது, எம்மினத்தை மதிப்பவனிற்கு ஏற்படும் சுயகௌரவம்.

ஒரு டொலரிற்கு சில பெற்றோல் பங்குகள் (Gas Bunk) சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தொழில் செய்தன. பழுதாகிய பொருட்களை வேறுபலர் வியாபாரம் செய்து காசாக்கினர். இப்படி இருக்க, எமது இனத்தை குற்றம் சொல்லும் எம்மவர் எவ் இனத்தவர்.

ஒரிருவர் செய்யும் தவறிற்கு எல்லோரையும் குற்றம் சொல்வது சரிதானா?

**நல்லதையே சிந்திப்போம்; நல்லதையே செய்வோம். நாளை நமதே!**

- நெற்றிக்கண்ணன்

### வட்டம் என்ன வட்டம்

வட்டவடிவான வெட்டவெளி வட்டம் வரைபட்ட உலகுக்கு வரைபடாவட்டம். கண்ணுக்கே தெரியாத கரைகாணாவட்டம். கார்முகில்கள் சூழ்ந்து கலைந்தோடும் வட்டம். மாபெரும் உலகுக்கு வானவெளிவட்டம். மண்ணுக்கும் விண்ணுக்கும் வரம்பான வட்டம். வர்ணங்கள் பல தோன்றி மறையும் மாவட்டம். வான்முகில்கள் படிந்து மழை பொழியும் வட்டம். வான்மதியும் சூரியனும் வலம் வரும் வட்டம். விண்ணுலக வட்டம் விளிம்பில்லா வட்டம் விண்மீன்கள் நீந்திவிளையாடும் வட்டம். உலகுக்கே உண்டான ஒரேஒரு வட்டம். உரிமை சொல்ல இயலாத உளம் கவர்ந்த வட்டம். எல்லையே இல்லாத இயல்பான வட்டம். எல்லோரும் காணும் இறைவனருள் வட்டம். கண்ணுக்கும் எட்டாத கனவுலக வட்டம். மண்ணிருந்து விண் உயர மறையாத வட்டம். மனதால் வரையும் மானசீக வட்டம். தீவகன். ச. சதாசிவம் சேவியர்

Since 1987

வசந்தா நகை மாளிகை

வசந்தன் - பத்மநாதன்

பத்தர்களின் கைவண்ணத்தில் தங்கத்தின் புதிய வடிவங்கள்!

TEL: 905 848 5151

FAX: 905 848 8502

OPEN 10:30AM - 8:30PM

MONDAY CLOSED

3025 Hurontario St., Unit. 103A, Mississauga

Singapore Communication

Since 1991

Only $25

50 + 50 Bonus Anytime Evenings & Weekends

First Monthly Fee (a $25 Value)

+ Save Extra $100 Off Handset

Hurry Offer Ends Soon

More Info. Call: 416-740-5292

5010 Steeles Ave. W.,Unit 17ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா -கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

416.267.8221

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை திறந்திருக்கும். தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.

ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்

திங்கள் - வியாழன்

காலை 7am - 2pm,

மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of Mcnicoll Ave.), Scarboro., ON.

Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)

- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel & Business

416.321.1515 •905.294.2429

4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு

WALK IN DENTAL CLINIC

9.00A.M - 9.00P.M

Dr. Iru Vijayanathan

குடும்ப பல்வைத்தியர்


416-264-3232

3150 Eglinton Ave. E.

Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

# செய்யும் தொழிலில், வெற்றி பெற





ஆங்கிலத்தில் வரும் செய்தித்தாள் ஒன்று படித்தேன். நீங்களும் படித்திருக்கலாம். பள்ளிப்படிப்பில், 12 வது வகுப்பில், அதிக மதிப்பெண் பெற்ற இருவரைப் பற்றிய செய்தி. இருவரும் பெற்ற சராசரி மதிப்பெண் 99.2 சதவீதம். இந்த வெற்றியின் இரகசியத்தை இருவரும் ஒரே மாதிரியாக கூறுகிறார்கள்.

நாங்கள் எங்களுக்கென்று படித்ததை விட மற்றவர்களுக்கு படிப்பில் பலவீனமாக இருக்கும் பிற மாணவர்களுக்கு கற்பிக்க என்று படித்த நேரமே அதிகம்.

ஒன்றை எளிமையாக, இனிமையாக மற்றவர்களுக்கு கூறக்கூடிய தன்மை உங்களிடம் இருக்குமேயானால் உங்கள் வெற்றி வாய்ப்பு அதிகரிக்கின்றது. இது கல்விக்கு மட்டுமல்ல, வியாபாரத்துக்கும் பொருந்தும். அத்தகைய தன்மை எளிமை யாக, இனிமையாகக் கூறல் உங்களுக்கு வந்து விட்டால், நீங்கள் சிந்தனையில் தெளிவானவர் என்று பொருள். குழப்பத் திற்கு அங்கு இடமில்லை. மற்றொன்று தனக்கு, தனக்கு என்று எப்போதும் சிந்திப்பதை விட மற்றவர்களுக்காகவும் சிந்திப்பது, பாடுபடுவது உங்கள் வெற்றி வாய்ப்பை அதிகரிக்கவே செய்கின்றது. தொழிலில் வெற்றி பெற, பல விடயங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அவற்றில் முக்கியமான ஒன்றை இங்கு கவனிப்போம்.

**பெரி. முத்துராமன்**

எப்படிப் பேசுவது அல்லது எழுதுவது? விற்பனை செய்பவருக்கு பேச்சுத்திறமை தேவை என்பது எல்லோருக்குமே தெரியும். ஆனால் விற்பனை செய்பவர், தன்னுடைய சுய தேவைக்காக, கமிசனுக்காக, வேலை செய்கிறார் என்ற எண்ணம் வாங்குபவரின் மனதில் வருமேயானால், அங்கு வியாபாரம் கைகூடாது. பிறகு எத்தகைய எண்ணம் வருமாறு பேச வேண்டும்?

விற்பனையாளர் நியாயமானவர் நேர்மை யானவர். நம் தேவைக்கு ஏற்றதையே அவர் சொல்கிறார். எப்படியாவது நம், தலையில் கட்ட முயலவில்லை. இத்தகைய எண்ணம் வாங்குபவர் மனத்தில் வருமேயானால் அங்கு நிச்சயம் வியாபாரம் கைகூடும். அதற்கு என்ன செய்ய வேண்டும்? முதலில் வாடிக்கையாளரின் தேவை என்ன என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அவரைப் பேச விடுங்கள். அவர் தேவையை புரிந்து கொண்டபின் அதற்கு ஏற்ற பொருளை வாங்க அவருக்கு ஆலோசனை கூறுங்கள். ஒருவேளை, அவருக்கு ஏற்ற பொருள் உங்களிடம் இல்லையேல், உங்களுக்குத் தெரிந்திருந்தால், அப்பொருள் எங்கு கிடைக்கும் என்று கூறுங்கள்.

இத்தகைய அணுகுமுறை உங்களைப் பற்றிய நல்ல எண்ணத்தை வாங்குபவரின் மனத்தில் உண்டாக்கும். அது உங்கள் வியாபாரம் பெருகக் காரணமாக அமையும்.

குறிப்பாக பேச அல்லது எழுத ஆரம்பிக்கும் போதே மற்றவருக்கு என்ன நன்மை என்பதைச் சட்டென்று சொல்லி விடுங்கள். பல சமயங்களில் மற்றவர்களுக்கு நேரம் இருப்பதில்லை. பொறுமையும் இருப்ப தில்லை. 30 விநாடிகளுக்குள், மேற்கொண்டு நீங்கள் சொல்வது அல்லது எழுதுவதைத் தெரிந்துகொள்ள நேரத்தை செலவிட வேண்டுமா? என்று மற்றவர் முடி வெடுக்கிறார். அந்த 30 விநாடிக்களுக்குள் அவரை உங்களால் கவர முடியவில்லை என்றால் பிறகு எவ்வளவு நேரத்தையும் செலவிட்டாலும் அது பெரும்பாலும் வீண்தான். சம்பந்தப்பட்டவரை அந்தச் செய்தி சென்றடைவதில்லை.

மற்றவர்களுக்கு உங்கள் பொருளை விற்கும் போது, அவர்களுக்கு என்ன லாபம்? என்பதை முதல் முப்பது விநாடிகளுக்குள் அவரகளைக் கவரும் வண்ணம் சொல்லி விடுங்கள். இதற்குப் பயிற்சியும், முயற்சியும் தேவை.

நேர்மையை நடிப்பில் கொண்டு வரமுடியாது. அப்படியே கொண்டு வந்தாலும் விரைவில் சாயம் வெளுத்து விடும். விற்பனையாளரின் ஒவ்வொரு சொல்லும். செயலும் நியாயமானதாகவும், நேர்மையானதாகவும் இருக்க வேண்டும். வாடிக்கையாளர், முட்டாள் அல்ல. விரைவிலேயே உண்மை க்கும், பொய்மைக்கும் உள்ள வேறுபாட்டைக் கண்டுபிடித்து விடுவார்.

எத்தகைய வார்த்தைகளை உபயோகிக்க வேண்டும் என்பது முக்கியமான விடயம். வார்த்தைகள் பலருக்கும் புரியக்கூடியதாக, இருக்கவேண்டும். வாக்கியங்கள் சிறியதாக இருக்கவேண்டும். முதல் வாக்கியத்திலேயே மற்றவரின் கவனத்தைக் கைக்கொள்ள முயலவேண்டும். அவ்வாறு கைக்கொண்ட கவனத்தை, தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளும் வகையிலேயே பேச்சு அல்லது எழுத்து அமைந்திருக்கவேண்டும்.

முயன்றுபாருங்கள்; வியாபாரம் பெருகும்.

உங்கள் தொழிலில் நீங்கள் வெற்றி பெற்றவரா? உங்கள் வெற்றி மேலும் பலருக்கு முன் உதாரணமாக அமையலாம். உங்கள் வெற்றிச் செய்தியைக் கேட்க நாங்கள் விரும்புகிறோம். சொல்ல நீங்கள் தயாரா?

அப்படியானால் இக் கட்டுரை ஆசிரியருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் தொழிலில் உங்கள் நேரத்தையும் பொருளையும் சேமிக்க, இலாபத்தை அதிகரிக்க, ஆலோசனைகளுக்கும், மறு ஆலோசனைகளுக்கும் திரு. பெரி. முத்துராமனுடன் தொடர்பு கொள்ளுங்கள். இவருடைய Success Biz Solution நிறுவனத்தின் வாயிலாக பல தொழில் முனைவர்கள் பயன் அடைந்து வருகிறார்கள். நீங்களும், இன்றே பயன் அடைய இப்போதே 416 430 0623 அல்லது (C) 416 278 2026 இல் தொடர்புகொள்ளுங்கள்.

பெரி. முத்துராமன் MBA, M.Com பட்டம் பெற்றவர். இந்தியாவிலும், கனடாவிலும் சிறுதொழில் வளர்ச்சியோடு தம்மைச் சம்பந்தப்படுத்திக் கொண்டவர். இவருடைய கட்டுரைகள் இந்தியாவில் Financial Express, Economic Times, Hindu Businesslime மற்றும் ரொறன்ரோவில் வெளிவரும் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.


ஞானம்ஸ் ஸ்ரூடியோ

Introducing 1 Hour Photo Lab: 3x5 & 8 x 12

Professional Photographer - கதிர்

416 - 750 - 8118

2381 Eglinton Ave., E., Kennedy / Eglinton, Scarborough



YARLCAN

STEAM CLEANING



உங்கள் சகலவிதமான Cleaning தேவைகளுக்கும் அழையுங்கள்-

* DUCT CLEANING
* CARPET CLEANING

மோகன்: (905) 887-7436 Cell: (416) 721-9709

SAFETY TRUCKS

Training School Ltd.

Training & Trucking

Classes A, D & Z

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம் (9ஆம் ஆண்டு)

We Accept Welfare & Unemployment Insurance

வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.




In Classes

* 365 (Learning Permit)
* Lock Books
* Air Brake (Z)
* Dangerous Goods
* Border Crossing
* Defensive Driving Course

* தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
* One On One Training
* அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

16 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

(905) 793-9546 / (416) 616-5979

250 Summerlea Road, Brampton, ON

# APPLEMORE AUTOMOTIVE

**உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்**



ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**

**435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6**

SPECIAL




## பாரிஸ் மாணிக்க விநாயகர் ஆலயம்



மாணிக்க விநாயகரின் அலங்கார உற்சவமும்
8வது தேர்த் திருவிழாவும்

மேலதிக தொடர்புகளுக்கு:
தேவஸ்தானம் - 01 40 34 21 89 / 01 42 09 50 45
Fax: 01 40 34 33 34
email - ganapar@wanadoo.fr
Website: http://perso.wandoo.fr/temple.hindou

---

**சைவதுரந்தரர் கவிஞர் வி. கந்தவனம் அவர்களின்**
**பெரியபுராணத் தொடர் சொற்பொழிவு நிறைவையொட்டிய**

# சேக்கிழார் விழா

**(இரு நாட்கள்)**

இடம்: அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயம்
*20 Nugget Ave., Unit 1, Scarborough, (McCowan & Sheppard)*
*செப்ரெம்பர் 05, 2003, செப்ரெம்பர் 6, 2003*
இரு நாட்கள் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

சேக்கிழார் விழாப் பேச்சுப் போட்டியிலும் பெரியபுராண மனனப் போட்டியிலும் பங்குபற்றிய சிறார்களுக்கு செப்டெம்பர் 6, 2003 அன்று பரிசில்கள் வழங்கல்.

ன்ராறியோ இந்து சமயப்பேரவை, தொடர்புகளுக்கு: 416-724-6240

---

## சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தின் கனடா ஒன்று கூடலும் புதிய நிர்வாக சபைத்தெரிவும்

ஒகஸ்ட் 16ஆம் திகதி நடைபெறவேண்டிய ஒன்றுகூடல் தவிர்க்க முடியாத காரணங்களால் பின்போடப்பட்டு, வருகிற செப்ரெம்பர் 13ஆம் திகதி (13.09.2003) சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மாலை 6மணிவரை நீல்சன் பூங்காவில் (Neilson Park) வழமைபோல் நடைபெறும். Neilson & Finch.

16 வயதுகுட்பட்ட சிறுவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகளும், மற்றும் பல நிகழ்ச்சிகளும் இடம் பெறும். புதிய நிர்வாக சபைத்தெரிவு 12 மணிக்கும் 1மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நடைபெறும். சகல பழைய மாணவர்கள் ஆசிரியர்கள் தத்தம் குடும்பத்துடன் வருகைதந்து ஒன்றுகூடலை சிறப்பித்து, காலை B.B.Q மற்றும் சிற்றுண்டி மதியபோசனத்திலும் பங்குபற்றி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர். இறுதியில் பரிசளிப்பு வைபவமும் உண்டு.

தொடர்புகட்கு:- 416-754-2195 / 416-292-9043 / 416-446-2965 / 416-291-1919 /905-472-0379

---

## உலகத் தமிழர் இயக்க செஞ்சோலை தமிழ்ச் சிறார் வட்ட கனடாக் கிளை விடுக்கும் திகதி மாற்றம் பற்றிய அறிவித்தல்

னடா செஞ்சோலை தமிழ்ச் சிறார்களினால் ரொறன்ரோ சிறார் வைத்தியசாலை (The lospital for Sick Children Foundation ) நிதி சேகரிப்பிற்கான ஓட்ட (Run for Sick Kids) நிகழ்வு தவிர்க்கமுடியாத காரணத்தினால் செப்டம்பர் மாதம் 27ம் திகதி சனிக் கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் சகல தமிழ் சிறார்களையும் பெற்றோர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

உ.த.இ. செஞ்சோலை தமிழ்ச் சிறார் வட்டம்


**Ontario's pass rate is 37%**
**Our pass rate is 100%**

மாகாணப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை
ஈட்டிக் கொடுத்துச் சாதனை புரியும்

# V V TUTORING CENTRE

தரம் 10ற்குரிய

## ENGLISH LITERACY TEST - 2003

**KENNEDY** வளாகத்தில்
ஆகஸ்ட் 29, 2003ல் ஆரம்பிக்கிறது
வகுப்புகள்

**Mr. Tim Gervais B.A (Hons), M.Ed**
**Brintha Vadivel B.Sc**
**and**
**Mangay Chinnaiah B.A, Dip - In - Ed (Lond)**


ஆகியோரால் நடாத்தப்படும்

தொடர்புகளுக்கு

## வீ வீ ரியூரறிங் சென்ரர்

**416-701-1763 / 905-471-3084**

(தயவு செய்து தொலைபேசியில் தங்கள் செய்தி விபரத்தைப் பதிவு செய்யவும்)



# யோகா சோதிடம்

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- பலன் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

**416-299-8361**

**Niru** BRAND®

'நிரு' தயாரிப்புக்கள்'
கனடிய சுகாதார விதிகளுக்கமைய
கனடாவில் தயாரிக்கப்படுகின்றன




# No.1

முதல் தரமான
மிளகாய், மல்லி
ஏனைய
சரக்கு வகைகள்
கொண்டு
தயாரிக்கப்படுவதனால்

# தரம்
# No. 1

**Manufacturers & Distributors of**

*Niru Brand®* **Products**

**NIRU ENTERPRISES INC.**
76 Howden Road, Scarborough, Ont. M1R 3E4 Canada
**Tel: 416-750-1976 Fax: 416-750-8779**
E-mail: niru@total.net Web: www.niru.com

**Distributors in Europe**
Niru (Europe) Ltd.,
16 College Fields Business Centre
Prince George's Road, London SW19 2PT U.K.
Tel:208-640-8228 Fax: 208-640-8423
E-mail: niru@supanet.com

# சாதாரண மனிதனின் சிந்தனையிலிருந்து!



## விளம்பரம்

விளம்பரத்தில் விளம்பரம் நிரந்தர பயன் தரும். அன்று தேமதுரம் வானொலியில் விளம்பரம் பத்திரிகைக்காக வான் அலைக-ளை அலங்கரித்த வாக்கியம் அது. விளம்பரங்கள் யாருக்கு பயன் தருகின்றன என்ற இன்றைய சிந்தனை இது.

வெகுஜன ஊடகங்களான பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணைய தளங்கள் எல்லாம் தமது சேவையை மக்களுக்கு தருவதற்கு வேண்டிய பொருளாதாரத்தை பெறுவதற்கு தங்கி இருப்பதே விளம்பரங்களில் தான். அந்த விளம்பரங்களை விளம்பரதாரர்கள் ஊடகங் களுக்கு தருவதே தமது சேவையை விளம்பரப்படுத்துவதற்காகும். விளம்பரப் படுத்துவது என்பது சேவை பற்றிய உண்மைகளை மக்களுக்குச் சொல்லி மக்களை தம்மிடம் வரப்பண்ணுவது என்ற நிலை மாறி இப்போது உண்மை போன்ற மாயையை மக்களிடம் உருவாக்கி மக்களை கொள்ளையடிப்பது அல்லது மக்களிடம் அடித்து பிழைப்பது என்ற அளவிற்கு நிலைமை வந்துள்ளது.

எண்பதுகளின் நடுப்பகுதிகளில் பெருமளவில் இங்கு குடியேறத் தொடங்கிய தமிழ் இனத்திற்கு சேவை செய்ய தமிழ் வியாபாரத் தாபனங்களும், தொண்ணூறுகளில் தமிழ் ஊடகங்களும் ஆரம்பிக்கப்பட்டன. வியாபாரத்திற்கு விளம்பரத்தின் தேவையை உணர்ந்து ஊடகங்களின் வளர்ச்சிக்கு வியாபார முதலாளிகள் ஆதரவு கொடுத்த வேளையில் தடி எடுத்தவன் எல்லாம் தண்டல் காரனாகி விடலாம் என்ற நம்பிக்கையில் பத்திரிகைகளில், வானொலி களில் வரும் விளம்பரங்களை எண்ணிப்



பார்த்து, டொலர்களினால் பெருக்கிப் பார்த்து, செலவுகளை மனங்களில் கழித்து பார்த்து, ஆதாயத்தை கனவுகளில் கூட்டி பார்த்ததன் பயனாக இன்னும் பல பத்திரிகைகள், வானொலிகள் என்று முளைவிட ஆரம்பித்ததை கண்ட பல வியாபார ஸ்தாபன உரிமையாளர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி, பணம் செலவு செய்யாமலே விளம்பரப்படுத்தும் கைங்கரியங்களை கற்றுக் கொண்டனர். அதன் பயனாக பல தரமான வானொலி நிகழ்ச்சிகளும், பத்திரிகைகளும் இழுத்து மூட வேண்டிய நிலைமை உருவாகியது. தமிழ் மக்களுக்கு ஒரு தொண்டாக இயங்கிய தேமதுரம், அலையோசை வானொலி சேவைகளை தருவதற்கு விளம்பரதாரர்களிடம் இருந்து விளம்பர சேவை பணத்தை அறவிட கல்லிலே நார் உரித்த கதையாகபட்ட அவலங்களை கதைகளாக எழுதினாலே பல புத்தகங்கள் வெளியிடலாம். ஆனால் சில தமிழ் மகன்களின் வெட்கம் கெட்ட பணம் பண்ணுவதற்கான போக்கை புத்தகமாக எழுதுவதை விட அவர்கள் பிச்சை எடுப்பதே மேல் என்று அவர்களுக்கு சொல்லி விடலாம்.




விளம்பரம் என்ற பெயரில் தகவல்களை தருவதிலும் செய்திகள், தகவல்கள் தருவதிலும் என்ற பெயரில் விளம்பரங்களை தந்து கொண்டு இருக்கும் பத்திரிகைகளிலும் விளம்பரங்கள் வருகின்றன. சேவையினை வேண்டி தொலைபேசி எண்ணை சுழற்றினால் அடுத்த முனையில் வருவது விளம்பரதாரரின் குரல் ஒலிப்பதிவு அல்லது இடைவிடாத ரீங்கார மணிஒலி. தகவலை பதிவு செய்தால் அவர்களிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வரவே வரா. இவர்கள் எல்லாம் ஏன் விளம்பரம. செய்கின்றார்கள் என்ற கேள்வியுடன் வரும் சந்தேகம் என்னவென்றால் பணம் கொடுத்து தான் அவர்கள் விளம்பரம் செய்கின்றார்களா என்று.

எனது புதிய அனுபவம், விற்பனைமுகவர் தொழிலுக்கு விளம்பரம் தேவை என்று பணத்தை செலவு செய்து விளம்பரத்தை செய்து மக்களின் அழைப்பை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருந்தால் அழைப்புக்கள் வருகின்றன. ஊடகங்களில் இருந்து விளம்பரம் தாருங்கள் என்று. தேடுகிறேன், விளம்பரங்கள் யாருக்குப் பயன் தருகின்றன என்ற கேள்விக்கு பதிலை.

சிந்தனை தொடரும்

பரம் G.
ஒரு சாதாரணமனிதன்


**COLOMBO PHOTO STUDIO**
(DIVISION OF ST FRANCIS PHOTO)
DIGITAL PHOTO STUDIO
WEDDING, BIRTHDAY, ARANKETTAM, BABY PHOTO, FAMILY PORTRAIT, PASSPORT, CITIZEN, PUBERTY CEREMONY, P.R CARD, ID PHOTO ETC.......
416 752 4444



"Professional Photo & Videography
All Types of Video & Photographics Work"
Digital Special Effect From $25.00
DIGITAL VIDEO TRANSFER
FREE FREE FREE
2 - 5 x 7 Studio Portrait Enlargement Free (Couple or Family) With Purchase of any Passport, Citizen, Permanent Resident Card, ID Photo
[Picture Value $20.00]
CEDARFACE PLAZA
2296 Eglinton Ave. East
Unit #6, Lower Level (Basement)
(Birchmount & Eglinton)
SCARBOROUGH



**LARGE INDOOR PUBLIC CAR AUCTION**

*EVERY WEDNESDAY EVENING*
*STARTING AT 7:00 PM - VIEWING FROM 9:00 AM*

**100+ VEHICLES ON DISPLAY INDOORS**

INCLUDE MANY LATE MODEL
> G.M. > FORD
> CHRYSLER > HONDA
> NISSAN > TOYOTA
>V.W., & OTHER FOREIGN & DOMESTIC VEHICLES




BANK REPOSSESSIONS, BAILIFF SEIZURES, BANKRUPTCIES, OFF LEASE VEHICLES, CONSIGNMENTS ETC.

**WEEKLY CASH BUYERS DRAWS OPEN**
MONDAY - FRIDAY 9:00 AM TO 6:00PM
**FOR VIEWING:** SATURDAY 10:00 AM TO 4:00 PM
1032 MARTIN GROVE ROAD, ETOBICOKE, ONTARIO.

**CIA PUBLIC AUTO AUCTION & SALES**
**416 - 242 - 5052**
www.cialeasing.com





வீட்டில் - முதலீடு வீண்விரயமாவதில்லை....
வீட்டில் - முதலீடே எம் வாழ்க்கைக்கு மூலதனம்!
பாதுகாப்பாக உங்கள் பணத்தை வீட்டில் முதலிட்டு
வாழ்க்கையில் வெற்றிபெற அழையுங்கள் பரம். ஜீ
பாடுபட்டு உழைத்த பணத்தை வீடுகளில்
முதலிடும் வழிகளை அறிய நாடுங்கள்

**Param Gnana**
Sales Representative
HomeLive GTA
Reality Inc.

HOMELIFE HIGHER STANDARDS

thémathuram.com

Cell: 416 230 1107 Bus: 416 321 6969
Res: 905 670 9969 (Mississauga)



# நாமும் நமது இல்லமும் 171

### வீடு வாங்க விரும்புபவர்களிற்கான ஓர் ஆலோசனை

எல்லோரிற்கும் சொந்தமாக வீடு வாங்குவதில் ஓர் ஆசை இருக்கின்றது. இதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. நீங்கள் வீடு வாங்க எண்ணும் போது எந்தெந்தக் காரணிகளைப் பற்றி அறிந்திருத்தல் வேண்டும் என்பதனைப் பற்றிப் பார்ப்போம்.

## ராஜா மகேந்திரன்

### வீடு வாங்குவதற்குரிய ஆரம்ப செலவுகள்

1. ஆரம்ப முதலீடு (Down Payment)
2. Inspection இன் செலவுகள்
3. வீட்டை மதிப்பிடுவதற்கான செலவு (Appraisal Fee)
4. 25% இற்குக் குறைவாக ஆரம்ப முதலீடு செய்தால் காப்புறுதி கட்டுப் பணத்திற்கான வரிப்பணம் (PST for CMGC Premium)
5. வக்கீல் செலவு (Lawyer Fee) இதற்குள் எல்லா சட்ட சம்பந்தமான செலவுகளும் அடங்கும்.
6. நில அளவைப் படச் செலவு (Survey Plan)
7. புது வீடுகளுக்கான Warranty Premium
8. Land Transfer Tax (நில மாற்று வரி - அரசாங்கத்திற்கு கொடுக்கப்படுவது.)

வீடு வாங்குவதற்கான சில தகவல்கள்

மிகக் குறைந்த முதலீடு 5%
உ-ம் 200,000 வீடு வாங்கினால் முதலீடு $10,000. CMHC இற்குரிய காப்புறுதி 3.075% (இது மோட்கேஜுடன் சேர்த்துக் கொள்ளப்படும்)
உதாரணமாக $200,000.00 வீட்டின் விலை 5% முதலீடும் காப்புறுதி $190,000 x 3.75% = இதற்குரிய PST இன் அளவு (   ) x 7% = (முதலீடு, சொந்தப் பணமாக இல்லாமல் இருப்பின், நன்கொடைப் பணமாக இருக்கலாம், ஆகக் குறைந்தது 15 நாட்களிற்கு முன்பாக வங்கியில் காட்டப்பட வேண்டும்)

*மோட்கேஜ் பெறுவதற்கு குடும்ப மொத்த வருமானத்தில் 1/3 பங்கு மோட்கேஜ் கொடுப்பனவிற்கும், Property Tax இற்கும் கொடுக்க கூடியதாக இருக்கவேண்டும்.

* மாறும் வீட்டை சூடாக்க / குளிராக்க (Heat ஆக்க) இனி ஏற்படும் செலவையும், வேறு கடன்கள் இருப்பின் அதற்குரிய மொத்தக் கொடுப்பனவு மொத்த வருமானத்தின் 40% ஐ தாண்டாமலும் இருத்தல் வேண்டும்.

GTA இல் புதிய வீடுகளின் விற்பனையில் ஏப்ரலில் 36% வீழ்ச்சி புதிய வீடுகளின் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக ரொன்றொன்ரோ பெரும்பாக வீடு கட்டுபவர்களின் சம்மேளனம் அறிவித்திருந்தது. கடந்த வருடம் ஏப்ரல் மாதத்திற்கான புதிய வீடுகளின் விற்பனைக்கும் இந்த வருட ஏப்ரல் மாதத்திற்குமான புதிய வீடுகளின் விற்பனையில் 36% வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரலில் விற்ற புதிய வீடுகள் 529 இவ்வருட ஏப்ரலில் (2003) புதிய வீடுகள் 3396 இருந்தும், இந்த வருடம் 45000 புதிய

வீடுகள் விற்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆண்டு 2002 இல் விற்ற வீடுகளின் எண்ணிக்கை 54000 ஆகும்.

### வீட்டிற்கு குடிபுகுந்த பிற்பாடான செலவுகள்

1. அடமானத்திற்குரிய செலவு Mortgage (Principal & Interest)
2. ஆஸ்தி வரி (Property tax)
3. * உஸ்ணம், * மின்சாரம், * தண்ணீர் (Heat*, Electricity*, / Water*), செலவுகள் (அடுக்குமாடி வீடுகள் (Condominium), தொடர் வீடுகள் (Town house) தவிர்ந்த வீடுகளிற்கு)
4. அடுக்கு வீடு (Condo.) ஆயின் அடுக்கு வீட்டை பராமரிப்பதற்குரிய செலவு. (Condo fee)
5. எதிர்பாராத திருத்த வேலைகள் (ஏற்பட்டால்)


**HOUSE FOR SALE**

- MORNINGSIDE & FINCH
- 3 BEDROOM HOUSE FOR SALE
- 3 WASHROOM • 2 STOREY
- CLOSE TO SCHOOL, 24 HRS BUS, HWY 401, MALL, RESTAURANT. TEMPLES, CHURCH, MOSQUE. OVER 2500 SQFT.
- ASKING ONLY $328,000.

**HOUSE FOR SALE**

- 3 BEDROOM + 3 BEDROOM (BSMT) APARTMENT. • KENNEDY - BRIMLEY
- SEP. ENTRANCE.
- 2 KITCHEN / 2 WASHROOM
- STEPS TO 24HRS TTC, SCHOOL, SUBWAY.
- ASKING PRICE ONLY $269,900 /B.O (VERY SERIOUS SELLER)

**CONDO FOR SALE**

- MCCOWAN & SHEPPARD (4727 SHEPPARD)
- 2 Bedroom + DEN • 2 Washrooms
- Asking only $194,900 • 1 Car parking

**CONDO FOR SALE**

- EGLINTON & MCCOWAN (121 TRUDELLE)
- 3 Bedrooms • 2 Washrooms
- 5 Min. to Kennedy Subway.
- 5 Appliances Included.
- Asking only $164,900.00

**HOUSE FOR SALE**

- THORNHILL
- BAYVIEW / GREENLANE
- 4 BEDROOM SEMI FOR SALE
- 3 WASHROOM • ASKING $294,900.

**TOWN HOUSE FOR SALE**

- RICHMONDHILL - YOUNGE & 16TH AVE.
- 3 BEDROOM TOWN HOUSE FOR SALE
- 3 BEDROOM FINISHED BSMT.
- CLOSE TO HILLCREST MALL.
- ASKING ONLY $237,000. (DON'T MISS THIS)

**Raja M. Mahendran,** P. Eng.
Vice President/Sales Rep.
Office - Tel.: (416) 321-6969
Direct: (416) 315-9397
Email: raja@mahendran.ca


| Interest | Rate |
|---|---|
| 5YrsMortgage | 4.49% |
| Prime rate | 5% |
| Bank rate | 3.25% |




**CLEANING**


• வீட்டு CARPET கழுவுதல் • CAR சம்போ Cleaning
அழையுங்கள் நேசன் - 416 - 332 - 1463
Cell - 416-716-0629

**pundit prithipal** astrologer

*Solutions for black magic, evil spirits, drinking problems, family related problems, money problems, love relationships, and much more!*

*Forecasting includes, palm readings, sun sign analysis, name readings, birthday readings, love and health, and money chances*

*CALL TODAY at 905-678-8932!*




Pundit Prithipal
26 Sledman St.
Malton, ON
L4T 1K5
tel: 905-678-8932
fax: 905-612-0906
cell: 416-219-7054
e-mail: pundit@punditprithipal.com
website: www.punditprithipal.com

Free Consultation! Call for help today - "I understand your Problems"


**MORTGAGES**




Five Years closing mortgage rates (அடமானம்) 4.9% on $100,000.00 per month installment comes out $550.00. For different time period closing rates are given below

LOW - LOW RATES AVAILABEL. TO GET BEST RATE IN TOWN PL. CALL: ANIL JOSHI

Variable Prime rate 0.65% and Prime rate 4.50%
Some conditions may apply





For more information call:
**Anil Joshi** at
**416.888.1072**

# Grade 1 TO UNIVERSITY 1ST YEAR

## புதிய வகுப்புகள் ஆரம்பம்

## ஆரம்பம் SEPTEMBER 1ST WEEK-2003

✎ ALGEBRA ✎ CALCULUS ✎ FINITE ✎ PHYSICS

- பாடவிதான [Syllabus] (முறைப்படி கற்பிக்கப்படும் - அதிகபட்சம் ஆறு மாணவர்கள்.

☛ பாடசா Quizzes
☛ பரீட்சை (Test)
☛ தவணைப் பரீட்சை
☛ இறுதித் தவணைப் பரீட்சை என்பன அடங்கும்.



- Grade 1 இலிருந்து Grade 3 வரையிலான மாணவர்களுக்கு **கணிதம், ஆங்கிலம்** கற்பிக்கப்படும்.
- கடந்த 8 வருட அனுபவம்

விபரங்களுக்கு: திரு. திருமதி. சிவ சர்மா - **416-724- 8336**

Neilson & Mclevin

---

INSURANCE

# காப்புறுதி

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES

RBC Insurance

## உங்கள் காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு நம்பிக்கையான நிறுவனம்

நீங்கள் உங்களை ஆயுட் காப்புறுதி செய்வதன் மூலம் உங்கள் அன்புக்குரியவர்கள் எதிர்காலத்தில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படவும் தங்கள் உறுதியான வாழ்வைத் தொடரவும் நீங்கள் உதவி செய்கிறீர்கள். ஆயுள் காப்புறுதிகளில் பல வகைகள் உள்ளன. அவை பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

### தவணைக் காப்புறுதி TERM INSURANCE

### நிரந்தர ஆயுட் காப்புறுதி PERMANENT INSURANCE & GUARANTEED PAID UP OPTION WITH CASH VALUE

இந்தத் திட்டத்தின்படி உங்கள் ஆயுட்காலம்வரை திட்டம் நீடிக்கும். கட்டுப்பணம் எக்காலத்திலும் அதிகரிக்காது. இத் திட்டத்தில் நீங்கள் விரும்பியபடி 10, 15 அல்லது 20 வருடங்களில் உங்கள் காப்புறுதிக்கான முழுக் கட்டுப்பணத்தையும் செலுத்தி முடிக்கலாம். அதற்கான உத்தரவாதம் உங்கள் காப்புறுதிப் பத்திரத்தில் எழுத்தில் வழங்கப்படும்.

### வீட்டு அடமானக் காப்புறுதி MORTGAGE INSURANCE

வங்கியின்மூலம் கொடுக்கப்படும் ஈட்டுக் கடனுக்கான காப்புறுதித் திட்டத்திலும் பார்க்க, எங்கள் இலகுவான அடமானக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் உங்கள் விருப்பத்திற்கேற்ப உங்கள் வீட்டு அடமானக் காப்புறுதியை தெரிவு செய்வதால் உள்ள சில நன்மைகள்

* உங்கள் பலன் பெறுபவராக (Beneficiary) உங்களுக்கு விரும்பியவரை நீங்கள் தெரிவ செய்யலாம். (வங்கியின் பெயரைத் தெரிவு செய்ய வேண்டியதில்லை)

* அடமானக் கடனுக்காக வங்கியை மாற்ற நேரிட்டால் காப்புறுதித் திட்டத்தை மாற்றவேண்டிய அவசியமில்லை.

* காப்புறுதிக்கான மாதாந்தக் கட்டுப்பணம் எந்தக் கட்டத்திலும் அதிகரிக்காது
* உங்கள் அடமானக் காப்புறுதியை ஆயுள் காப்புறுதியாகவும் மாற்றலாம்.

### வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி NON MEDICAL INSURANCE

40 வயது தொடக்கம் 80 வயது வரையிலானவர்களுக்கு வைத்திய பரிசோதனையின்றி காப்புறுதி செய்யப்படும். பணக் கொடுப்பனவு உறுதி செய்யப்படும். நீரழிவு நோயாளர்களும் இதில் அடங்குவார்கள்.

### சிறுவர் கல்வி சேமிப்புத் திட்டம் R.E.S.P

உங்கள் குழந்தைகளின் எதிர்கால உயர்கல்விக்கான சேமிப்புத் திட்டத்தில் அரசாங்கம் வழங்கும் 20 வீத மானயத்துடன் எமது நிறுவனம் வழங்கும் 15 வீத போனஸ் ஆகியவற்றைப் பெற்று நன்மையடையுங்கள்.

### நோய் வருமுன் காக்கும் காப்புறுதி CRITICAL ILLNESS INSURANCE



**SRITHARAN THURAIRAJAH**
(Associate Life Underwriter)

**Cell: 416 918 9771**
**Tel: 416 297 6932**


OUR GUARANTEES ARE WRITTEN IN YOUR POLICY



# விளையாட்டுத் தகவல்கள் - 130

## U.S. OPEN ரெனிஸ்

யு. எஸ் ஓபன் டென்னிஸ் போட்டி நியூயோர்க்கில் திங்கள் கிழமை (Aug. 25) தொடங்கியுள்ளது.



டென்னிஸ் உலகின் சிறப்புமிக்க 4 கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் ஒன்று யு.எஸ் ஓபன். இப்போட்டியில் அமெரிக்காவின் பீட் சாம்ப்ராஸ், வீனஸ் வில்லியம்ஸ், செரினா வில்லியம்ஸ் சகோதரிகள் பங்கேற்கப்போவதில்லை என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் ஆடவர் பிரிவில் அமெரிக்காவின் ஆந்த்ரே அகஸ்ஸி, ஆன்டி ரோடிக் ஆகியோரின் ஆட்டம் முக்கியத்துவம் பெறும் எனலாம்.

33 வயதாகும் அகஸ்ஸி இன்னும் அதே உடல்பலம், வேகம், ஆட்டத்திறனுடன் உள்ளார். அதனால் மூன்றாவது முறையாக பட்டம் வெல்லும் முனைப்புடன் இருப்பார்.

ரோடிக்கும் (21) இம்முறை சாம்பியன் பட்டம் வென்றாக வேண்டும் என்ற துடிப்புடன் களமிறங்குவார்.காயம் காரணமாக வில்லியம்ஸ் சகோதரிகள் இப்போட்டியில் பங்கேற் இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு நடைபெற்ற போட்டியில் சகோதரி வீனஸை தோற்கடித்து பட்டம் வென்றவர் செரினா.

உடல்நிலை சரியில்லாமல் அமெரிக்க மருத்துவமனையில் இந்தியாவின் லியாண்டர் பயஸ் சிகிச்சை பெற்று வருவதால் யு.எஸ். ஓபனில் இந்த ஆண்டு கலப்பு இரட்டையர் போட்டியில் பங்கேற்கப் போவதில்லை என்று பிரபல டென்னிஸ் வீராங்கனை நவரத்திலோவா அறிவித்துள்ளார்.

இவர் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் பயசுடன் கலப்பு இரட்டையர் போட்டியில் ஆடி வந்தார். கலப்பு இரட்டையர் போட்டியில் பயஸைத் தவிர வேறு எவருடனும் ஆடுவதில்லை என்று இவர் முடிவு செய்துள்ளார்.

ஆடவர் பிரிவில் பட்டம் வெல்ல ஸ்விட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், ஸ்பெயினின் பெரைரா, அவுஸ்திரேலியாவின் ஹீவிட் ஆகியோருக்கு இடையே கடுமையான போட்டி நிலவலாம்.


மகளிர் பிரிவில் பட்டம் வெல்வதற்கு ஜஸ்டின் ஹெனின், கிம் கிளைஸ்டர்ஸ் (பெல்ஜியம்), ஜெனிபர் காப்ரியாட்டி (அமெரிக்கா), மௌரெஸ்மோ (பிரான்ஸ்) ஆகியோரிடையே கடும் சவால்கள் எழும்.

**எஸ். கணேஷ்**

### 4வது டெஸ்ட்: இங்கிலாந்தை வென்றது தென்ஆப்பிரிக்கா

லீட்ஸ் (இங்கிலாந்து), ஆகஸ்ட். 26: இங்கிலாந்துக்கு எதிரான 4வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தென்ஆபிரிக்க அணி வெற்றி பெற்றுள்ளது. இங்கிலாந்தின் ஹெடிங்லீயில் திங்கள் கிழமை கடைசி நாள் ஆட்டம் நடைபெற்றது.

தென்ஆபிரிக்கா முதல் இன்னிங்ஸில் 342, இரண்டாவது இன்னிங்ஸில் 365 என மொத்தம் 707 ஓட்டம் குவித்தது. இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 307, இரண்டாவது இன்னிங்ஸில் 209 ஓட்டம் என மொத்தம் 516 ஓட்டம் மட்டுமே எடுத்தது. இதையடுத்து, 191 ஓட்டம் வித்தியாசத்தில் இங்கிலாந்துக்கு தோல்வி.



5 ஆட்டங்கள் கொண்ட இத்தொடரில் ஒரு ஆட்டம் Draw ஆனது. மற்ற 2 ஆட்டங்களில் தென் ஆப்பிரிக்கா வென்றது. இங்கிலாந்து ஒரு ஆட்டத்தில் மட்டுமே வெற்றிபெற்றது.

இதையடுத்து இத்தொடரில் தென்ஆபிரிக்கா 2-1 என முன்னிலையில் உள்ளது. தென் ஆபிரிக்காவின் காலிஸ் 54 ஓட்டத்துக்கு 6 விக்கெட் வீழ்த்தினார். இது அவரது கிரிக்கெட் வரலாற்றில் சாதனை. ஓல்ரவுண்டரான காலிஸ் இப்போட்டியில் மொத்தம் 9 விக்கெட் வீழ்த்தியுள்ளார்.

ஆட்டநாயகனாக கேரி கிர்ஸ்டன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
ஸ்கோர்: தென்ஆபிரிக்கா 342 (ஜி. கிர்ஸ்டன் 130, எம். ஜோன்டெகி 59, ஜெ. ருடால்ப் 55) மற்றும் 365, எ. ஹால் 99 (ஆட்டமிழக்காமல்). ஜி. கிர்ஸிடன் 60).


இங்கிலாந்து 307 (மார்க் புட்சர் 77, எம். டிரெஸ்கோதிக் 59, ஏ. பிளின்டாப் 55) மற்றும் 209 (புட்சர் 61, பிளின்டாப் 50, ஜெ. காலிஸ் 6-54).

கடைசி டெஸ்ட் செப்ரெம்பர் 4இல் ஓவலில் நடைபெறும். இங்கிலாந்தில் 1965இல் நடைபெற்ற தொடரில் தென் ஆபிரிக்கா வென்றுள்ளது.

**வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.**


NTE AUTO


New Trade Engineering Inc.



ஸ்காபரோவில் 12வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair



SIVABALAN

416.750.1573

என். ரி. இ. ஓட்டோ இங்க்

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH



# கொஞ்சிப் பேசும் பிஞ்சுகளை முறையாக வளருங்கள்


குழந்தைகள் சமுதாயத்தின் விதைகள். நிகழ்காலம் மோசமானதாக இருந்தால் அதன் நிழல்படாமல் வளர்க்கப்பட வேண்டியவர்கள் அவர்கள். விதையில் கவனம் செலுத்தாத விவசாயிக்கு அறுவடைக்கு போக வேண்டிய அவசியம் ஏற்படாது. ஏனெனில் விளையும் பயிரை முளையிலே தீர்மானிக்கப்பட்டு விடுகின்றது. நாட்டின் எதிர்காலம் தீர்மானிக்கப்படும் இடம் வீடு. அந்த வீட்டின் சூழ்நிலை சின்னவயதிலே சிந்தனை சீரடையும் வகையில் அமைய வேண்டும்.

## நா. க. சிவராமலிங்கம்

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே
அவர் நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும்
அன்னை வளர்ப்பினிலே



அன்னையே குழந்தையின் முதல் ஆசான். குழந்தை வலுவும் வனப்பும் அறிவும் ஆற்றலும் உடையதாக ஆக்கப்படுவதற்கு அன்னையே முதற்காரணம். ஒரு குழந்தை முதலில் வல்லவனாக இருக்க வேண்டும். உடற் திண்மையும் உளத்திண்மையும் அவனுக்கு அவசியம் உடற் பயிற்சிகளினால் உடல் வலுவும் வீரதீர கதைகளினால் உளஉரமும் ஏற்படும். வலிமை சேர்ப்பது தாய் முலைப்பால். வச்சிரமம் போன்று உளம் அமைய உதவுவது வரலாற்று நாயகர் கதைகள். இவை இரண்டையும் ஒரு தாய் ஊட்டும் போது அக்குழந்தை வீரனாய் தீரனாய் உருப்பெறுகின்றான்.



ஓடிவிளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடிவிளையாடு பாப்பா ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

குழந்தைகள் உற்சாகமாக சுறுசுறுப்பாக இருக்க வேண்டுமென்பது பாரதியாரின் எதிர்பார்ப்பு. குழந்தைகள் தங்கள் மனம் போல் விளையாடுவது அவர்களுக்கு மூன்று வகையில் நன்மை பயப்பது. விளையாட்டுகள், ஐம்புலன்களுக்கும் நல்ல பயிற்சியாக அமைகின்றன. ஐம்புலன்களும் விளையாட்டில் குவிவதால் ஒன்றில் ஒரு நிலையை மனம் எளிதில் அடைகின்றது. ஒருவரோடு ஒருவர் விட்டுக்கொடுத்து இணைவது ஆகிய சமுதாயப்பண்புகள் ஏற்படுகின்றன. வாழும் பிள்ளையை மண்விளையாட்டில் தெரியுமென்பது எதிர்காலச்சிற்பியை விளையாட்டுத்தான் உருவாக்குகின்றது என்று கூறப்படுகின்றது.

சிரிப்புப்பாதி அழுகை பாதி சேர்ந்தது தான் மனித வாழ்க்கை. அதில் நெருப்புப்பாதி நீரும்பாதி நிறைந்ததல்லவோ உலக நீதி. உலகில் நல்லவர்கள் உளர். தீயவர்களும் உளர். மீசை வைத்துக் கொள்வதால் வீரம் வந்து விடாது. தீமைகளை எதிர்க்கும் ஆசையும் வேண்டும். சின்னவயதில் தீமைகளுக்கு எதிராக திசை திருப்பப்படும் குழந்தைகள் தான் தேசத்தின் திசையை அதன் வரலாற்றை மாற்றி அமைப்பார்கள் எனவேதான்

பாதகம் செய்பவரைக் கண்டால் - நாம்
பயம் கொள்ளலாகாது பாப்பா
மோதி மிதித்து விடு பாப்பா அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா

என்று பாப்பாவிற்கு பயம் போக்கின்றார் பாரதியார்.

தாய்மொழி உணர்வு குழந்தைகளுக்கு ஊட்டப்பட வேண்டும். சின்ன வயதில் சிந்தனை அரும்பும் காலத்தில் பழகும் மொழிக்கு பலம் அதிகம். எனவே தாய் மொழியை விடுத்து பிற மொழியை பயில்வது கண்கட்டி சித்திரம் பார்ப்பது போலாகும்.



ஆகையினால் தாய் மொழிப் பயிற்சியும் பற்றும் அவசியம். தாய்மொழிக்கும், தாய்ப் பாலுக்கும் மகத்துவம் அதிகம் எனவேதான்.

'சொல்லில் உயர்வு தமிழ் சொல்லே அதை தொழுது படித்திடடா பாப்பா' என்று ஆணையிடுகிறார் பாரதியார்.

புலம் பெயர்ந்து வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்தாலும் தமிழர்கள் தமது இன அடையாளங்களான மொழியையும் பண்பாட்டையும் மறந்து, துறந்து வாழக்கூடாது. குழந்தைகளுக்கு இவற்றை ஊட்டுவதன் மூலம் தமது தனித்துவத்தையும் தன்மானத்தையும் நிலை நாட்டலாம்.

தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவர்க்கொரு நிலையுண்டு
அமிழ்தம் அவனுடைய மொழியாகும்
அன்பே அவனுடைய வழியாகும்.




**பிள்ளை பராமரிப்பு**

MARKHAM & SHEPPARD பகுதியில் இரண்டு வயதிலிருந்து பத்து வயதுப் பிள்ளைகளைப் பராமரிக்கவும் பாடசாலைக்கு கூட்டிச் செல்லவும் அழையுங்கள். அத்துடன் பாடசாலையில் மதிய வேளையில் நிற்கும் மாணவர்களை வீட்டிற்கு கூட்டி வந்து பராமரிக்கும் வசதியும் உண்டு. ஒரு சில மணிநேரப் பராமரிப்பு வசதியும் உண்டு.

மேலதிக தொடர்புகளுக்கு: **416-293-0947 / 647-298-4292**





# New Kalyani Catering & Take out




**292 Markham Road, Scarborough, Ontario**

**416-261-9774**



**வாரத்தில் ஏழு நாட்களும்**

**Lunch Special**

| | |
|---|---|
| Madras chicken Buriyani | $3.99 |
| Jaffna Buriyani | $4.99 |

**Dinner Special**

| | |
|---|---|
| Megoring Noodles Chicken | $3.99 |

*(Malasiyan Style)*

வாரத்தில் ஏழு நாட்களும்

**இடியப்பம் 6¢**

500க்கு மேல் கொள்வனவு செய்தால் 5¢

ரொட்டி (பறோட்டா) 50¢

100க்கு மேல் கொள்வனவு செய்தால் 40¢

**ஒவ்வொரு திங்கள் முதல் - புதன் வரை**

**Lunch Special**

Vegitable Thali $2.99

***Dinner Special***

Singapore Noodles $2.99

**ஒவ்வொரு வியாழன் முதல் - வெள்ளி வரை**

**Lunch Special**

விரதச் சாப்பாடு 10 பதார்த்தங்களும் வழங்கப்படும் $3.99

***Dinner Special***

| | |
|---|---|
| மசாலா தோசை | $2.49 |
| Plan தோசை | $1.99 |
| 5 இட்லி | $1.99 |

(சாம்பார், சட்னி இலவசம்)


**சனிமுதல் - ஞாயிறு வரை**

**Lunch Special**

*முத்துச்சம்பா 10 பதார்த்தங்களுடன் வாழையிலையில்*

**Dinner Special**

*கொத்து ரொட்டி(கோழி, ஆடு, மாடு)*



சனி, ஞாயிறு- தீவக மக்களின் முறைப்படி விஷேசமாக தயாரிக்கப்படும் கூழ் $3.99

எந்த நேரத்திலும் எவ்வளவு ஆனாலும் ஓடராக செய்து பெற்றுக் கொள்ளலாம். மற்றும் (Ceylon Bakery பாண் வகைகள், Cake வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். அனைத்து சிற்றுண்டி வகைகளும் மலிவு விலையில் செய்து தரப்படும். எந்த விதமான கொண்டாட்டங்களானாலும் மலிவு விலைகளில் Catering செய்து தரப்படும்.



# ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

உங்கள் ஜீவியத்தைப் பெரிதளவு பாதிக்கக் கூடிய சின்ன விஷயங்கள் பலவற்றை இன்றுவரை நீங்கள் தவற விட்டிருக்கலாம். இன்று, உங்கள் வெளிப்புற வாழ்வினைச் சிறப்புறச் செய்யக்கூடிய, ஒரு சக்தி வாய்ந்த அந்தரங்க அகவாழ்வை உருவாக்குங்கள். யேசுபிரான் அருளியபடி தட்டுங்கள் திறக்கப் படும். கேளுங்கள் கொடுக்கப்படும். புரிந்துணர்வு, அன்பு, இன்பம் யாவற்றையும் எனக்குத் தா என ஆண்டவனிடம் தியானம், பஜனை பிரார்த்தனை மூலம் வேண்டினால் நிச்சயம் அவன் தருவான் என்ற நம்பிக்கை யுடன் இறைவனிடம் யாசித்து வேண்டி யவற்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**லலிதா புருடி**

என்னால் இயன்றவற்றையெல்லாம் நான் செய்து முடித்தால் "ஐயோ, நான் இதைச் செய்திருக்கலாமே! அதைச் செய்திருக் கலாமே! என விசனப்படக்கூடாது என்பதை நான் உணர்ந்ததும் என் வாழ்வு வளம் பெறும்.

பொறுமையின் மேன்மை பற்றி நல்லதோர் பாடம் படிக்க ஒரு வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு சிறிய வங்கியில் காசு மாற்ற நிற்கும் வரிசையில் போய் நில்லுங்கள். நீங்கள் காசை மாற்றிக்கொண்டு அவசரமாக எங்கோ போகவேண்டும். ஆனால் உங்கள் அவசரத் திற்கு ஏற்றதாய் அங்கு ஒன்றுமே நிச்சயம் நடக்கப்போவதில்லை. எத்தனை தரம் பெருமூச்சுவிட்டு ஆலாய்ப் பறந்தாலும், அந்த வரிசை முன்னேறுவதைத் துரிதப்படுத்த உங்களால் ஒன்றுமே செய்ய முடியாது அல்லவா? "என்னடா இது! அசையுதில்லை வரிசை," என உள்ளுக்குள் எரிந்து புகைந்து கோபித்தாலும், ஒவ்வொருவராக வேலை முடிய முடியத் தான் உங்கள் நேரம் வரும். வரவேண்டிய நேரம் வரும்போது தான் வரும். வாழ்க்கையிலும் இதேபோலத்தான் சம்பவங் கள் நடைபெறும். பரீட்சை பாஸ் பண்ணுவதோ, தாலி கழுத்தில் ஏறுவதோ, வீடு வாங்குவதோ, பிள்ளை பிறப்பதோ, எல்லாம் அந்தந்த நேரத்திலேதான் நடை பெறும். ஒரு நிமிஷங்கூட முந்திப் பிந்தி நடக்காது அல்லவா?

இரு வைத்திய நண்பர்களின் கதை இது. முதலாம் நம்பர் பிள்ளை வேண்டுமா, நான் பிறக்கப்பண்ணித் தருகிறேன் என்று தானா கவே உறுதியளித்த மகப்பேற்று நிபுணர் ஆலோசனைப்படி வைத்தியசாலைக்கு 27 ஆம் திகதி சென்ற மற்ற வைத்தியரின் மனைவி, இரவு குளிப்பதற்காக வீடு சென்று திரும்பியபோது ஏதோ காரணத்திற்காக வைத்தியசாலைக்குள் செல்ல முடிய வில்லை. 28ஆம்திகதி அதிகாலை ஏற்றிய மருந்தின் உதவியுடன் பிரசவவலி ஆரம்பித்து 29ஆம் திகதி அதிகாலை தான் பிள்ளை பிறந்தது. சகல உதவிகள் இருந்தும் நாம் நினைத்தபடி ஒன்றுமே நடக்காது என்பதற்கு இது என் அநுபவத்தில் நடைபெற்ற நல்லதோர் எடுத்துக்காட்டு.

பொறுமை உண்மையில் உங்கள் தேர்வு. இடைவிடாது சுழலும் வாழ்க்கைச் சக்கரத்தில் நம்பிக்கை வைப்பதை மனப்பூர்வமாக தேர்ந்தெடுக்கும் பொறுமை ஒரு திறமை. ஒரு சக்தி அசைந்து சுழல ஆரம்பித்ததும் நிச்சயம் வாழ்க்கைச் சக்கரம் போக



வேண்டிய இடத்தைக் கடைசியில் நிச்சயம் அடைந்தே தீரும். என் மனத்திடம் நம்பிக்கை தான் பொறுமை. நீங்கள் ஆவலுடன் இப்படி நடக்க வேண்டும் என எதிர்பார்த்துக் கொண்டிருப்பது எப்போ நடக்கவேண்டுமோ அப்போ நிச்சயம் நடக்கும் என்பதைத் தெரிந்து புரிந்து கொண்ட உணர்வுத் திறன் தான் பொறுமை. பொறுமை ஒரு விஞ்ஞானம். உங்கள் சிருஷ்டிக்கு உள்ள உணர்வுத் திறன்களை, எவ்வளவு பூரணமாக உபயோகிக்க முடியுமோ அவ்வளவுக்கு உபயோகிப்பதால், நல்ல முடிவு ஏற்படுவது ஆரம்பத்திலேயே நிச்சயமாகி விடுகின்றது. நீங்கள் மனதார விரும்பிச் செயற்படுத்துவது உங்கள் இதய மார நம்புவது, நீங்கள் ஆத்மார்த்தமாகப் போற்றுவது நிச்சயம் நடந்தே தீரும். சரியான நேரத்தில் சரியான மாதிரி நடந்தே தீரும்.


வெள்ளிக்கிழமை பின்னேரம் சிறிய வங்கியில் மெதுவாக ஊரும் நீண்ட வரிசையில் அவசரப்பட்டுக் கொண்டு நிற்கும் போது பொறுமையைக் கடைப்பிடிப்பது கஷ்டம் தான். ஆனால் இந்த வரிசையில் உங்களால் பொறுமையைக் கடைப்பிடிக்க முடியுமானால் நீங்கள் நிச்சயம் சகல இடங்களிலும், எந்த நேரமும் பொறுமையைக் கடைப்பிடிக்கலாம். இன்றுவரை நீங்கள் அடிக்கடி பொறுமை யில்லாது ஆத்திரப்பட்டுக் கோபப்படுபவராக இருக்கலாம். இன்று மட்டும் அந்தப் பழைய பழக்கத்தை விட்டு பொறுமையாயிருப்பது எப்படி என்பதை அலசி ஆராய்ந்து கடைப் பிடிக்க ஆரம்பியுங்கள். முயற்சி செய்யுங்கள். முதலில் உங்களுடனே பொறுமையாக இருங்கள். மற்றவர்களுடன் பொறுமையாக இருங்கள். வாழ்க்கையுடன் பொறுமையாய் இருங்கள். பொறுமை ஒருநாளும் வீண் போகாது. நிச்சயம் பலன் தருவது பொறுமை.

இன்று நான் என்னுடன், மற்றவர்களுடன், வாழ்க்கை நீரோட்டத்துடன் பொறுமை யாயிருக்கும் கலையை பொறுமையுடன் கற்றுத்தேற முயற்சிப்பதை ஆரம்பித் துள்ளேன்.

மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள் - 905-624-9617


ACTION HONDA

"WHERE CAR OWNERSHIP IS MADE EASY"



புதிய பழைய HONDA வாகனங்களை

ஈழத்தமிழ் மகன் சோதீஸ்

இடம் பெறும்போது

- சிறந்த சேவை
- Life time Oil change
- மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.



THIS MONTH SPECIAL

3.8% FINANCING & LEASING

ALL 2003 VEHICLES ARE ON CLEARANCE SALE


416-704-1179

அலுவலக நேரம்

Mon, Fri, Sat: 9 am - 6 pm

Tues, Wed: 12 noon - 9 pm

4334 Kingston Rd, Scarborough




வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?




வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள்.

முற்றாக ஒழிக்க அழையுங்கள்.



- No Spraying
- No Smelling
- No Moving




Call: Kanthan Tel: 416-283-9538

HomeLife GTA
Realty Inc., Real Estate Broker
McCowan Rd., Suite#206,
Scarborough ON. M1S 3Y3

Bus: (416) 321-6969
Cell: (416) 666-5515
Fax: (416) 321-6963





## TELUS mobility™

MiKE

**Get a Free Phone with Free Unlimited Local Calling upto 4 months.**



LG TM 520 — Audiovox CDM-8150 — Samgsung SPH-A540 — Samgsung SPH-A520



i 95

$40 Plan
Unlimited Evening & Weekends
400 Any Time Minutes
Free
Caller ID
Call Waiting
Call Forwarding
Voice Mail

வியாபார மற்றும் போக்குவரத்துத் துறை நண்பர்களுக்கு ஏற்ற சிறப்பான திட்டம்

i 55



மாதமொன்றுக்கு $40 மட்டுமே*
Unlimited Dispatch
-No Long Distance Charge
கனடா முழுவதும் மேலதிக கட்டணம் ஏதுமின்றி எப்போதும் உரையாடலாம்

$30 Plan
Unlimited Evening & Weekends
+ Lunch Hour (12:00pm-1:00pm)
50 Any Time Minutes
Free
Call Waiting
Conference Calling
Voice Mail

$30 Plan*
Free Evening & Weekends
150 Any Time Minutes
Free
Call Waiting
Call Forwarding
Conference Calling
Voice Mail

$40 Plan
Unlimited Evening & Weekends
350 Any Time Minutes
Free
Call Waiting
Conference Calling
Voice Mail

இலவசம்! இலவசம்! இலவசம்! இலவசம்! இலவசம்!
Car Charger - Leather Case - Home Delivery

செல்போன்கள், உதிரிப்பாகங்கள், திருத்த வேலைகள் அனைத்துக்கும் தமிழில் அழையுங்கள்:

**Sam: 416 707 3794**

**Pagetron Communication Inc.**

*Some restrictions apply call for details

---

# FABRICATED PLASTICS LIMITED

# வேலை வாய்ப்பு


## GENERAL LABOUR & GRINDERS NEEDED TO START WORK IMMEDIATELY

Fabrication Plant, near Canada's Wonderland
(Keele Two Lights North of Major MacKenzie.)

**Apply in person & come prepared with your safety shoes to start work,**

**If hired - $9.00 per Hour**

@ FABRICATED PLASTICS LIMITED,
2175 Teston Road, Maple, Ontario.





# அன்புத் தமிழ்

**அறுவை - 1**

"ஹலோ!"
"ஹலோ!"
"ஒரு விளம்பர மாஸ்டர்....
"சரியாய்ப் போச்சு! சங்கத் தமிழன், சிங்கத் தமிழன், சண்டைத்தமிழன், புளுகுத் தமிழன், பொறாமைத் தமிழன், போட்டித் தமிழன் என்று நீளுகின்ற பட்டியலில் புதிதாக விளம்பரத் தமிழன் வேறையா?

"பட்டியலில் அவசரத் தமிழன் என்ற பேரையுஞ் சேர்த்துக் கொள்ளுங்கோ! அது உங்களைப் போன்ற ஆட்களுக்கு நல்லாய்ப் பொருந்தும்.
"உங்கடை விளம்பரக் கதையை நான் பொறுமையாய் இருந்து கேட்கையில்லை என்று சொல்லுறியள் போல. நீங்கள் தொலைக்காட்சியிலே ஒரு விளம்பரம் பார்த்தேன் என்று தொடங்குவியள். ஒரு வடிவான பொம்பிளை அரை நிர்வாணமாய் வந்தாள் எண்டு தொடருவியள். பிறகு அவள் துடையைத் தூக்கினாள் என்டு சொல்லிச் சிரிப்பியள். இதையெல்லாம் நான் பொறுமையாயிருந்து கேட்க வேணும். அப்படித்தானே?
"இல்லை மாஸ்டர்...."
"கொஞ்சம் பொறும். உங்களைப் போன்ற ஆட்களுக்கென்றுதானப்பா விளம்பரங்களைக் கவர்ச்சிப் பெண்களை வைத்து எடுக்கிறாங்கள். நீங்கள் மெய்மறந்து பார்த்துவிட்டு வேறு ஆட்களுக்கும் இரசிச்சுச் சொல்லுவியள் என்பதும் அவங்களுக்குத் தெரியும். எத்தனை நல்ல நிகழ்ச்சிகள் தொலைக்காட்சியில் வருகுது. அதுகளைப் பற்றிப் பேசாமல் இடையிடையே வாற விளம்பரங்களைப் பற்றி ஏனப்பா பேசி ஆட்களின் நேரத்தை மினக்கெடுத்திறியள்?'
"நான் மினக்கெடுத்தவில்லை மாஸ்டர், நீங்கள் தான் தெரியாத்தனமாய்...'
"ஓம் ஓம் எனக்குத் தெரியாது. என்னைப் போன்ற அனுபவசாலிகளுக்கு ஒன்றும் விளங்காது. உங்கள் தரவளிக்கு எல்லாந் தெரியும். அதுவும் கனடாவுக்கு வந்த பிறகு தெரியாதது எல்லாமே பலபேருக்குத் தெரியுது. சங்கம் அமைக்கத் தெரியுது.. பதவிவகிக்கத் தெரியுது, விழா நடத்தத் தெரியுது, சமயம் வளர்க்கத் தெரியுது, பேசத்தெரியாவருக்கு எல்லாம் பேசத் தெரியுது, எழுதத் தெரியாத ஆட்களுக்கெல்லாம் எழுதத் தெரியுது. எல்லாவற்றுக்கும் மேலாக விளம்பரஞ் செய்யத் தெரியுது. அது பெரிய முன்னேற்றமல்லே.'

## கவிஞர் வி. கந்தவனம்

" ஒன்றை விட்டிட்டியள்...'
" நான் விட்டது கிடக்கட்டும். எத்தனை பேரிங்கை நேரத்தை விட்டவர், நியாயத்தை விட்டவர், தாரத்தை விட்டவர், சமயத்தை விட்டவர், மானத்தை விட்டவர், மரியாதையை விட்டவர், தமிழை விட்டவர், தமிழீழத்தை விட்டவர் என்று உமக்குத் தெரியுமா?"
" தெரிஞ்சு நான் என்னத்தை மாஸ்டர் செய்யப் போறன? "
" எத்தனையோ செய்யலாம். உமக்கு ஏதாவது செய்யலாம், பிள்ளைகுட்டியளுக்கு செய்யலாம், சொந்த பந்தங்களுக்குச் செய்யலாம், ஊருக்குச் செய்யலாம், உலகத்துக்குச் செய்யலாம். எத்தனையோ செய்யலாம். தெரியாமற் செய்வதிலும் பார்க்கத் தெரிஞ்சுகொண்டு செய்வது எவ்வளவோ நல்லது. ஆனால் ஒன்று....'
" என்ன மாஸ்டர்...?
" தெரிஞ்சுகொண்டு குற்றஞ் செய்யக்கூடாது.'
" தெரியாமற் செய்யலாமே?'
" அதுவுங் கூடாது. சரி பிழையை அறிந்து கொண்டு சரியானதைச் செய்யவேண்டும். அப்படித் தெரியாது போனால் சும்மா இருக்காமல் தெரிந்தவர்களிடம் கேட்டாவது தெரிந்து கொள்ள முயலவேண்டும்.'
